**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண். 02/2020**

வாதி தரப்பு சாட்சியாக PW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | துர்கா லெட்சுமி | Husband Name | : | சத்தியதாஸ் |
| Village | : | வலங்கைமான் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | வீட்டுக்குடித்தனம் |
| Religion | : | | Age | : | 44 |

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி -</u>**

கடந்த 15.09.2011 ம் தேதியில் தாவா சொத்தை நான் S. ஞான சேகரன் மற்றும் பலர் ஆகியோரிடமிருந்து கிரயம் வாங்கியதற்கான கிரய சாசனம் கணினி நகல் **வா.சா.ஆ.1 ஆகவும்**, கடந்த 20.01.2012ம் தேதியிட்ட தாவா சொத்தினை கிரயம் பெற்ற பிறகு எனது பெயரில் பட்டா மாறுதல் ஆணை வழங்கப்பட்டதற்கான சான்றிதழின் உண்மை நகல் **வா.சா.ஆ.2 ஆகவும்**, கடந்த 30.01.2012ம் தேதியிட்ட தாவா சொத்துக்கான அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் **வா.சா.ஆ.3 ஆகவும்**, கடந்த 30.01.2012ம் தேதியிட்ட தாவா சொத்துக்கான சிட்டா பதிவேட்டின் உண்மை நகல் **வா.சா.ஆ.4 ஆகவும்**, கடந்த 16.10.2015ம் தேதியிட்ட தாவா சொத்தில் கட்டிடம் கட்டுவதற்காக பெறப்பட்ட கட்டிட அனுமதி வரைபடத்தின் அசல் **வா.சா.ஆ.5 ஆகவும்**, கடந்த 11.06.2018ம் தேதியிட்ட எனது பெயரில் பெறப்பட்ட வீட்டுவரி ரசீதின் அசல் **வா.சா.ஆ.6 ஆகவும்**, எனது பெயரில் உள்ள தாவா சொத்திற்கான மின் கட்டண அட்டை அசல் **வா.சா.ஆ.7 ஆகவும்**, கடந்த 19.10.2019ம் தேதியிட்ட எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின்

அலுவலக நகல் **வா.சா.ஆ. 8 ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது. பிராது படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.09.23 16:27:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.